## அரசாங்க அறிவித்தல்கள்

## 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

## 3 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம் மேற்குறித்த பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட 2019 ஓகத்து மாதம் 10 ஆந் திகதிய 2135/68 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக இறுதியாக திருத்தப்பட்டவாறான 2019 மாச்சு மாதம் 05 ஆந் திகதிய 2113/9 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட (II) அட்டவணை, பின்வரும் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவாறு திருத்தியமைக்கப்படுவதாக பிரகடனப்படுத்துகின்றேன்.

மஹிந்த ராஜபக்ஷ
நிதி, பொருளாதாரம் மற்றும்
கொள்கை அபிவிருத்தி அமைச்சர்

நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு 01.
2020 மாச்சு மாதம் 06 ஆந் திகதி

### அட்டவணை

2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 05 ஆந் திகதிய 2113/9 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் (II) ஆம் அட்டவணையின் 7 ஆம் இலக்க விடயத்திற்கு அடுத்ததாக பின்வரும் விடயம் உள்ளடக்கப்படுகிறது.

| இலக்கம்<br>I | விபரம்<br>II | உற்பத்தி வரி<br>III |
|---|---|---|
| 8. | உள்நாட்டு அதிகாரம் பெற்ற முகவர் ஒருவரால் வெளிநாட்டு வழங்குநருக்காக திறக்கப்பட்ட ஒன்றுதிரட்டிய நாணயக் கடிதம் ஊடாக இறக்குமதி செய்யப்பட்ட, குறித்த நாணயக் கடிதம் எவரேனும் ஒருவரால் அத்தகைய உள்நாட்டு அதிகாரம் பெற்ற முகவருக்காக 2018 செத்தெம்பர் 30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் திறக்கப்பட்ட உள்நாட்டு நாணயக் கடிதம் ஒன்றை அடிப்படையாகக் கொண்டு திறக்கப்பட்ட மற்றும் 2020 மே மாதம் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் இலங்கை சுங்கத்தினால் அகற்றப்படுகின்ற ஏதேனும் மோட்டார் வாகனம்/வாகனங்கள் | செலுத்த வேண்டிய தீர்வை அல்லது திருத்தப்பட்டவாறான 2017 நவம்பர் 09 ஆந் திகதிய 2044/32 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள வரி வீதாசாரம் ஆகிய இரண்டில் அவ் மோட்டார் வாகனத்தின்/வாகனங்களின் இறக்குமதியாளரால் தீர்மானிக்கப்பட்டவாறு |